வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 20/=

06.11.2020 வெள்ளிக்கிழமை

## மணிவண்ணன் ஆதரவாளர்கள் நால்வரின் பதவிகளைப் பறிக்கிறது தமிழ் காங்கிரஸ்!

யாழ்ப்பாணம், நவ 06

உள்ளூராட்சி சபைகளின் நான்கு உறுப்பினர்களை பதவியில் இருந்து நீக்குமாறு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யாழ். மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர்களான தர்ஷிபா, டென்சி ஆகியோரும், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான நிதர்சன், சிவகுமார் கஜன் ஆகிய நால்வருமே,

02

### எல்லை மீறுகிறது நிலைமை

# ஒரே நாளில் நாட்டில் ஐந்து பேர் உயிரிழப்பு!

## கொரோனா பலி 29 ஆக உயர்வு

கொழும்பு, நவம்பர் 06

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர். மூன்று பெண்களும், இரு ஆண்களுமே இவ்வாறு பலியாகினர். இவர்களில் நால்வர் 60 வயதைக் கடந்தவர்கள்.

இதனால் நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளது.

02



## ஊரடங்கு நீக்கப்பட்டாலும் கண்காணிப்புகள் தொடரும்

கொழும்பு, நவ 06

ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் 'கொவிட்' ஒழிப்புக்காக நடைமுறைப்படுத்தப்படும் சுய தனிமைப்படுத்தல் நடைமுறைகளை கடுமையாக கண்காணிக்குமாறு ஜனாதி

02

## நேற்று மட்டும் 400 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு,நவ.06

நாட்டில் நேற்று மட்டும் 400 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும்

02

## பஸிலை பாராளுமன்றத்தில் பார்க்க விரும்புகின்றது அரசு

### அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



கொழும்பு, நவ 06

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்து நான்கு வருடங்களுக்குள் புரட்சியை ஏற்படுத்திய பஸில் ராஜபக்ஷவை பாரளுமன்றத்தில் பார்ப்பதற்கு அரசு விரும்பு

02

## ஆயிரம் மில்லியன் ரூபாவில் யாழில் 3 வீதிகள் சீரமைப்பு

### இன்று ஆரம்பித்துவைக்கிறார் ஜோன்ஸ்டன்

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 3 வீதிகளைச் சீரமைக்கும் திட்டத்தை நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆரம்பித்து வைக்கிறார்.

நாட்டில் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு வீதிகளைச் சீரமைக்கும் பணிகளை நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்

02

## வடக்கின் நான்காவது கொரோனா சிகிச்சை நிலையம் மாங்குளத்தில்

### சேவைகள் நேற்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ 06

வடக்கு மாகாணத்தில் நான்காவது கொவிட்-19 சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 நோயாளர் படுக்கைகளைக் கொண்ட கொவிட் -19 சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது. அந்தப் பிரிவு நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருந்தங்கேணி பிரதேச வைத்தியசாலை

02

## பொலிஸார் இருவர் பணி இடைநீக்கம்!

### தனிமைப்படுத்தல் நிலையத்தில் போதையில் ரகளை புரிந்தமையால்

யாழ்ப்பாணம்,நவ.06

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை நிலைய பாதுகாப்புக் கடமைக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர், மதுபோதையில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டில் பணி இடைநீக்கம் செய்யப்

02

## றோலருக்குள் சிக்கியவர் பரிதாபமாக உயிரிழப்பு

### கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.06

வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த றோலருக்குள் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் கொடிகாமம் வீதி முள்ளிப்பகுதியில் இடம்பெற்றது.

நெல்லியடி - கொடிகாமம் வீதியைத் திருத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

02

## கரவெட்டியில் ஒரே குடும்பத்தில் மூவருக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம்,நவ.06

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

இரண்டு பெண்களும் சிறுவன் ஒருவனுக்குமே கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

64 மற்றும் 39 வயது பெண்கள் இருவருக்கும் 14 சிறுவனுக்கும் இவ்வாறு கொரோனா தொற்றுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

02

## நேற்று மட்டும்....

மினுவாங்கொடை, பேலியகொடை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அரச தகவல் திணைக்களம் மேலும் கூறியுள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 600 ஆக உயர்வடைந்ததுடன் 5,940 தொற்றாளர்கள் தற்போது நாடு முழுவதுமுள்ள கொரோனா தொற்றுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 6,660 பேர் குண மடைந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனா சந்தேகத்தில் 429 பேர் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் கொரோனா தொற்று காரணமாக இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளனர். (அ-எ)

## ஊரடங்கு....

பதி கோட்டாபய ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்ட அனைத்து குடும்பங்களும் தத்தமது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படும்.

அவ்வாறு தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் சுமார் 84 ஆயிரமாக காணப்படுகின்றது. மேல் மாகாணத்தில் மட்டும் 13 ஆயிரத்து 911 குடும்பங்களில் 40,676 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரும் முறையாக கண்காணிக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் 'கொவிட்' ஒழிப்பு விசேட செயலணி நேற்று முற்பகல் ஒன்றுகூடிய போதே ஜனாதிபதி அவர்கள் இந்த பணிப்புரையை விடுத்தார்.

நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் கண்டறியப்பட்டால் அவர்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் வசிக்கும் பிரதேசம் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். தேவை ஏற்படின் அப்பிரதேசத்தை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தோட்டங்கள் மற்றும் அடுக்குமாடி வீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார மத்திய நிலையங்களை மொத்த விற்பனைக்கு மட்டும் மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றியும் பி.சி. ஆர். பரிசோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டும் மிகுந்த கவனத்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டார். மரக்கறி, பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை எடுத்துக்கொண்டு மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் லொறிகளுக்கு ஊரடங்கு சட்ட அனுமதிப்பத்திரங்கள் அவசியமில்லை.

கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக பேணுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தனியார் வைத்திய சாலைகளின் பங்களிப்புடன் சுகாதார அமைச்சினதும் கடற் படையினதும் கண்காணிப்பின் கீழ் வர்த்தக வலயத்தை அண்டிய பிரதேசங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளை எழுமாறாகவும் தொடர்ச்சியாகவும் செய்வதற்கும் ஜனாதிபதி அவர்களினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களும் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## கரவெட்டியில்....

கடந்த மாதம் கொழும்பு, பேலியகொடை மீன் சந்தைக்குச் சென்று வந்த வருக்கு கோரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. அந்த நபர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் உறவினர்கள் மூவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் ஒரு வாரத்துக்கு மேலாக சுயதனிமைப்படுத்தலில் வைத்து கண்காணிக்கப்பட்டவர்கள். அவர்களிடம் மாதிரிகள் பெறப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-எ-2-3)

## வடக்கின்....

மற்றும் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியின் ஒரு பகுதி கொவிட்-19 சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

மருதங்கேணி ஆரம்ப வைத்திய சாலையில் 50 நோயாளர் படுக்கைகளைக் கொண்டதாக கொவிட்-19 சிகிச்சை நிலையம் கடந்த மாத நடுப் பகுதியிலிருந்து இயங்கி வருகிறது.

அத்துடன், கோப்பாய் தேசியக் கல்வியற் கல்லூரி வளாகத்தில் ஒரு பகுதி 350 கொவிட்-19 நோயாளிகளைப் பராமரிக்கும் நிலையமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம் பகுதியில் கொவிட் -19 சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகிறது.

சுமார் 100 படுக்கைகளைக் கொண்டதாக இந்த கொவிட்-19 சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி நிலையமாக இருந்து தற்போது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஆளுகைக்குள் இருக்கும் காணியிலேயே இந்த சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகிறது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் நான்காவது கொவிட்-19 சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்திய சாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது. (அ-3)

## பொலிஸார்....

பட்டுள்ளனர்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்களுடன் முரண்பட்டு கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி வளாகத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா சிகிச்சை நிலையங்கள் தனித்தனியே இயங்கி வருகின்றன. தனிமைப்படுத்தல் நிலையம் இராணுவத்தினரின் நிர்வாகத்தின் கீழும் கொரோனா சிகிச்சை நிலையம் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கீழும் இயங்குகின்றன.

அங்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவுக் கடமைக்கு என கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து இரண்டு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் மதுபோதையில் நள்ளிரவு 12 மணியளவில் அங்கிருந்த இராணுவத்தினருடன் முரண்பட்டுள்ளனர். அதனால் இராணுவச் சிப்பாய்கள் பொலிஸாரைத் தாக்கியதால் இரு தரப்புக்கும் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரால் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில் மதுபோதையில் இருந்தமை மற்றும் கடமையைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டில் இருவரும் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதற்கான பணிப்புரையை யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வழங்கியுள்ளார். (எ-3)

# தவறான தகவல் கொடுத்து தப்பினாராம் தொற்றாளர்!

கொழும்பு, நவ 06

தனியார் மருவத்துமனையில் பி.சி. ஆர் பரிசோதனை செய்து கொண்ட கொரோனா தொற்றாளர் ஒருவர், தவறான தகவல் களை வழங்கியுள்ளார் என்று கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நபர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாகவும் அவர் தவறான தகவல்களை வழங்கியுள்ளதால், அவரை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே, கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பவர்கள் முதலில் சுயதனிமையில் இருந்தவாறு, தமது நோய் அறிகுறி குறித்து பகுதிக்குப் பொறுப்பான சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆயிரம் மில்லியன்....

னாண்டோ இன்று ஆரம்பித்து வைக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம் பெறும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய திட்டம் கூட்டத்தைத் தொடர்ந்து இந்த வீதிகள் சீரமைப்புப் பணி அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

1.60 கிலோ மீற்றர் தூரமுடைய யாழ்ப்பாணம் - கடற்கரை வீதி 488.4 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது. 5.503 கிலோ மீற்றர் நீளமுடைய வல்லை- உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வீதி 507.50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு வீதிகளுக்குமான முன்மொழிவை யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முன்வைத்திருந்தார்.

அத்தோடு கடற்தொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவினால் முன்மொழியப்பட்ட 1.23 கிலோ மீற்றர் நீளமுடைய அரியாலை நெடுங்குளம் பிள்ளையார் கோவில் வீதி 54.443 மில்லியன் ரூபா செலவிலும் 2.05 கிலோ மீற்றர் நீளமுடைய கிளிநொச்சி செல்வபுரம் - கிருஸ்ணபுரம் வீதி 74.40 மில்லியன் ரூபா செலவிலும் சீரமைக்கப்படவுள்ளன.

## ஒரே நாளில்....

கொழும்பு 02 ஐச் சேர்ந்த 46 வயதுடைய ஆணொருவர் உயிரிழந்தார். அவர் பிம்புர வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். அவர் நீண்டகாலமாக சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்.

கொழும்பு, வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவர் நெஞ்சு வலி காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்தார். இவருக்கும் கொரோனா தொற்றியுள்ளது.

கொழும்பு 12 ஐ சேர்ந்த 58 வயதுடைய பெண் ஒருவர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மாரடைப்பே அவரின் மரணத்துக்கு காரணம்.

கொழும்பு 14 ஐ சேர்ந்த 73 வயதுடைய பெண் ஒருவர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையில் கொரோனா தொற்றினால் அவரது ஈரல் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 15 ஐ சேர்ந்த 74 வயதுடைய ஆண் ஒருவர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். அவருக்கு கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தார்.

## பஸிலை....

கின்றது என அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொதுஜன முன்னணியைத் தொடங்கியவர்களில் பஸில் ராஜபக்ஷவும் ஒருவர். அந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டமைக்கு அவரும் காரணம். கட்சியை ஆரம்பித்து நான்கு வருடங்களுக்குள் பஸில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்

நாங்கள் அவரை பாராளுமன்றத்தில் பார்க்க விரும்புகின்றோம். ஏனெனில், அவருக்கு உரிய கௌரவத்தை வழங்க வேண்டும்.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இடம்பெறுவதை உறுதி செய்வதற்காகவே அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்ற எதிரணியினரின் குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றோம்.

பஸிலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விரைவில் பதவி விலகவுள்ளார்-என்றார்.

## றோலருக்குள்....

இதில் கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளிப் பகுதியில் வீதி திருத்தும் றோலருக்குள் தவறி விழுந்தவர் அதனுள் சிக்குண்டு உயிரிழந்தார். பலாங்கொடையைச் சேர்ந்த பிறேமரத்தின (வயது- 62) என்பவரே உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-3)

## மணிவண்ணன்....

கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவர்களை சபைகளின் உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்குமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினால் யாழ். மாவட்ட உதவி தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்தில்...

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கூட இராணுவத்தில் பல்வேறு தரத்திலும் வட பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பணியாற்றியதுடன் அவர்களில் பலர் மேஜர் ஜெனரல்களாகவும் பதவி உயர்வுகளைப்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வுகளைப் பெற்ற தமிழர்களில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவரும், யாழ்ப்பாண நூலகம் எரிவதைக் கண்ணுற்ற மறுகணமே மாரடைப்பினால் உயிரிழந்த வண. பிதா டேவிட் அடிகளாரின் சகோதரரின் புதல்வருமான மேஜர் ஜெனரல் லக்ஷ்மன் டேவிட் குறிப்பிடத்தக்கவர்.

எனவே, அரசாங்கம் மீளவும் இராணுவத்தில் வடமாகாண இளைஞர்களைச் சேர்க்க முன்வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். ஆயினும், ஆயுதப்படைகள், பொலிஸ் சேவைகளில் சேர்க்கப்படும் வடபகுதி இளைஞர், யுவதிகள் எந்தவொரு பாரபட்சமும் காட்டப்படாது, அவர்களது திறமைகளுக்கு மதிப்பளித்து நடத்தப்பட வேண்டியதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.11.2020 வெள்ளிக்கிழமை
சார்வாரி, ஐப்பசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொறுப்பு வாய்ந்தவர்களின் பொறுப்பு

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் கூற்று ஒன்றை, உண்மைகளை ஆராயும் தளம் (Fact Check) கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது. விக்னேஸ்வரன் கூறியது என்ன? நாடாளவிய ரீதியில் வேலையற்றவர்களின் விகிதம் 6 விகிதத்திற்கும் குறைவாக இருக்கின்ற நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் வேலையற்றவர்களின் விகிதம் 10 விகிதத்தைத் தாண்டிவிட்டது என விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். இந்தக் கூற்றை மேற்கோள் காட்டி, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில செய்தி ஊடகமொன்று விக்னேஸ்வரன் பிழையான தகவல்களை வெளியிடுகிறார் என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இலங்கையின் புள்ளிவிபரங்களின்படி, வேலையற்றவர்களின் விகிதம் எங்குமே 10 விகிதத்தைத் தாண்டவில்லை. வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டமே, வேலையற்ற வர்களின் எண்ணிக்கை அதிகமுள்ள மாவட்டமாகும். மட்டக்களப்பின் வேலையற்றவர்களின் விகிதம் 7.2. இதற்கு அடுத்தது அம்பாறை மாவட்டமாகும். அங்கு 6.9 விகிதம். அதற்கடுத்ததுதான் யாழ்ப்பாணம். அங்கு 6.0 விகிதம். முழு இலங்கையையும் பொறுத்தவரையில், மாத்தறைதான் வேலையற்றவர்கள் அதிகமுள்ள மாவட்டமாகும். அங்கு மொத்த சனத்தொகையில் 7.5 விகிதத்தினர் வேலையற்றவர்களாக இருக்கின்றனர். அதற்கடுத்த மாவட்டமாக மாத்தளை இருக்கின்றது. அங்கு 7.4 விகிதம். அதற்கடுத்தது அம்பாந்தோட்டை. அங்கு 7.3 விகிதம் ஆகும்.

இந்தத் தகவலைக் காண்பித்தே குறித்த ஊடகம் விக்னேஸ்வரனின் அறிக்கையை உண்மைக்கு மாறானது என குறிப்பிட்டிருக்கின்றது. குறித்த Fact Check ஒருவேளை அரசாங்கத்தினால் நடத்தப்படுமாக இருந்தால், இது அரசின் திட்டமிட்ட பிரசாரம் என்று ஒதுக்கிவிடலாம். ஆனால், குறித்த தளம் வெரிட்டே ஆய்வு (Verité Research) என்னும் அரசு சாரா நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. அரசியல்வாதிகளின் அறிக்கைகளிலுள்ள உண்மைகளையும் பொய்களையும் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்துவதே இந்தத் தளத்தின் பிரதான பணியாக இருக்கின்றது.

விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சராக இருக்கின்றபோது இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியவர். அதேவேளை, தமிழ் மக்களுக்கான நீதி தொடர்பில் உறுதியாக குரல் கொடுத்துவருபவர். இவ்வாறானதொரு பொறுப்பு வாய்ந்தவர் போதிய ஆய்வுகள் இல்லாமல் தகவல்களை வெளியிடும்போது, விக்னேஸ்வரன் பேசிவரும் ஏனைய விடயங்களைக்கூட, மற்றவர்கள் சந்தேகத்துடன் நோக்கும் நிலைமை உருவாகலாம். இது, தமிழ் மக்களின் நீதி நோக்கிய பயணத்தில் பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஆய்வுகளுடன் தகவல்களை வெளியிடும் பழக்கம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. தமிழர்களுக்கென சுயாதீனமான ஆய்வு நிறுவனங்கள் இல்லாமையே இதற்கான காரணமாகும். அப்படியான நிறுவனங்களை உருவாக்குவதில் அரசியல்வாதிகள் ஒருபோதும் அக்கறை எடுத்ததுமில்லை. இதன் காரணமாக, அரசியல்வாதிகள் தங்களின் வாயில் அகப்படுவதையெல்லாம் பேசும் போக்கொன்று தமிழ் அரசியல் சூழலில் காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் புள்ளிவிபரங்கள் தொடர்பில் பேசும்போது முன்கூட்டிய ஆய்வுகள் அவசியம். இதற்கென ஆலோசனை வழங்கக் கூடிய அமைப்புக்களை வைத்திருப்பது அவசியம். தமிழ் பிரதிநிதிகள் இவ்வாறு போதிய ஆய்வுகள் இல்லாமல் தகவல்களை வெளியிடுவதானது, அவர்கள் கூறும் அனைத்து விடயங்களையுமே மற்றவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலைமையை உருவாக்கிவிடலாம். எனவே, அறிக்கைகளை வெளியிடும்போது பொறுப்பு வாய்ந்தவர்கள் பொறுப்பாக நடந்துகொள்வது அவசியம்.

| கருத்து

# இராணுவத்தில் வடக்கு இளைஞர்கள்!

- அலசுவது **இராஜதந்திரி** -




இராணுவத்தில் வட மாகாணத்தைச் சேர்ந்த ஒன்பதாயிரம் இளைஞர்களை இணைப்பதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதாக வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

அரச படைகள் என்றதுமே வயிற்றில் புளியைக்கரைக்கும் ஓர் உணர்விலேயே வடக்கு-கிழக்கு இளைஞர்கள் ஒன்பது வருடங்கள் முன்னர் காணப்பட்டனர்.

மூன்று தசாப்த காலமாக காணப்பட்ட அசாதாரண நிலபரம், ஆயுதப்படைகளை விரோதிகளாகப்பார்க்கும் ஒரு நிலைமையையே வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தி விட்டிருந்தது.

ஆனால், இலங்கையில் ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் ஆரம்ப காலத்தில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தவர்களே மிக முக்கிய பதவிகளில் இருந்துள்ளனர். குறிப்பாக, பொலிஸ் சேவையில் ஏராளமான தமிழர்கள் மிக முக்கிய பதவிகளை வகித்ததோடு, நாட்டின் அனைத்து பாகங்களிலும் அவர்கள் திறம்பட பணியாற்றியிருந்தனர். முப்படைகளிலும், பொலிஸ் சேவையிலும் தமிழர்கள் பணியாற்றிய காலம் இனக்குரோதங்கள் பெரிதும் வலுப்பெற்றிராத காலகட்டமாகவே இருந்தது.

**தமிழரான முதல் இராணுவ தளபதி**

இலங்கை இராணுவத்தின் முதலாவது தளபதியாக ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு என்ற தமிழரே விளங்கினார். கடற்படைத் தளபதியாக அட்மிரல் ராஜன் கதிர்காமர் பணியாற்றியிருந்தார். இவர், யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டவர் என்பதோடு, காலஞ்சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுதவிர, இலங்கையின் விமானப்படையிலும் தமிழர்கள் பலர் பணியாற்றியதோடு, சிறந்த விமானிகளாகவும் அனைத்து விதத்திலுமான விமானங்கள், ஹெலிகொப்டர்களை செலுத்தக்கூடிய வல்லமை பெற்றவர்களாகவும் விளங்கியிருந்தனர்.

ஆங்கிலேயர்களுக்குப் பின்னர் இலங்கை விமானப்படையினருக்கு விமானிகளாக பயிற்சியளிக்கும் சிரேஷ்ட விமானப்படை விமானியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். விவேகானந்தன் என்பவரே பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரிகள் தரத்தில் இருந்த தமிழர்களைவிட, முப்படைகளிலும் சிப்பாய்களாக ஏராளமான தமிழர்கள் பணியாற்றியிருந்தனர்.

**பொலிஸ் சேவை**

பொலிஸ் சேவையிலும் பொலிஸ் மா அதிபர்களாக ருத்ரா ராஜசிங்கம், ஈ. ஆனந்த ராஜா ஆகிய தமிழர்கள் பணியாற்றியிருந்ததோடு, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்த ஆர். சுந்தரலிங்கம் சர்வதேச பொலிஸ் நிறுவனமான இன்டர்போல் பொலிஸ் நிறுவனத்திலும் பணியாற்றி சிறப்புற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்கென தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றைக்கட்டியெழுப்பி, இலங்கையின் ஆயுதப்படைகளுக்கு தரை, கடல், ஆகாய மாரக்கமாக பலத்த சவால்களை விடுத்திருந்தனர். இராணுவத்தில் அதி உயர் தகைமையான பீல்ட் மார்ஷல் தரத்தில் உள்ளவரும் தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவுமிருக்கின்ற சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் ஒருதடவை உரையாற்றியபோது, மிகத் திறமைசாலிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டதன் மூலமே தம்மால் பீல்ட் மார்ஷல் தரம்வரை உயர முடிந்தது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு- கிழக்கு இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கை அரசுக்கு எதிராக மட்டுமல்ல. உலக இராணுவ வல்லரசுகளில் ஒன்றாக விளங்கும் இந்தியாவுடனும் வெற்றிகரமான மோதல்களை முன்னெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மூன்று தசாப்த கால யுத்தத்தில் பங்குபற்றிய இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மட்டுமல்ல, இந்திய இராணுவ அதிகாரிகள்கூட தமது அனுபவங்களைப்பற்றி எழுதிய நூல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளது போராடும் திறனை குறைத்து மதிப்பிடாது, உயர்வாகவே எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மேஜர் ஜெனரல் லக்ஷ்மன் டேவிட்**

இந்நிலையில், ஆயுதப்படைகளில் வடபகுதி இளைஞர்களைச் சேர்ப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொடுக்க முடிவதுடன், இலங்கையில் தூர்வடைந்து போயிருக்கின்ற இன நல்லுறவையும் நல்ல முறையில் கட்டியெழுப்ப முடியும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

# வீட்டிலிருந்தே பொருள்கள் பெற யாழ். மக்களுக்கு விசேட ஏற்பாடு

## யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில்



யாழ்ப்பாணம்,நவ.06

**யாழ்.நகரில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்கும் வகையில் வீடுகளிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யும் நடைமுறை யாழ். வணிகர் கழகத்தினரின் ஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத்திலும் கொரோனாத் தாக்கம் அதிகரித்து வரும் காரணத்தால் நகரத்துக்கு வருவதை பொதுமக்கள் இயன்றளவு குறைக்குமாறு சகல தரப்பினரும் கேட்டுக் கொள்கின்றார்கள்.

குறிப்பாக பஸ் போக்குவரத்து தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சிலவேளைகளில் இன்னும் நெருக்கடி ஏற்படலாம். அதே நேரத்தில் யாழ். நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் இயல்பாக இயங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அங்கே வரும் பொதுமக்களின் அளவை இயன்றளவு குறைக்குமாறு நாங்கள் வர்த்தகர்களை கேட்டிருக்கின்றோம்.

ஏனென்றால் அதிகளவில் மக்கள் கூடாமல் இருக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். அதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்கள்,உணவுப் பண்டங்கள் மற்றும் உணவகங்களில் இருந்து உணவுகள் தேவைப்படும் பொதுமக்களுக்கு வியாபார நிலையங்களின் தகவல்களை வழங்க இருக்கிறோம். விரும்பினால் நீங்கள் வீடுகளிலிருந்து அந்தக் கடைகளுடன் தொடர்பு கொண்டு உங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

தற்காலச் சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாட்டின் மூலம் நகரின் மத்தியில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்கும் வகையில் யாழ். வணிகர் கழகத்தினரால் இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இந்தச் சேவையை பயன்படுத்திக் கொள்ள முடியும்-என்றார். (அ-3)

## ஆனமடுவ வாகன விபத்து பொலிஸ் அதிகாரி மரணம்!

கொழும்பு, நவ.06

ஆனமடுவ பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி விபத்தில் உயிரிழந்துள்ளார். ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரத்நாயக்க முதியன்சலாகே அஜித் ஹேமந்த ரத்நாயக்க (வயது-38) என்ற இலகம பகுதியைச் சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார். காயமடைந்த பொலிஸ் அதிகாரி மோசமான நிலைமையில் இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இரவு பொலிஸ் அதிகாரிகள் இருவரும் கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்தபோது, லொறியொன்றில் சட்டவிரோதமாக கால்நடைகள் கடத்தப்படுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து சந்தேகத்துக்கிடமான லொறியொன்றைப் பொலிஸார் மறித்தபோது அது நிற்கவில்லை. இதையடுத்து லொறியை விரட்டிச்சென்றுள்ளனர். இதன்போது பொலிஸார் சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து ஆனமடுவ மணிக்கூட்டுக் கோபுரத்துடன் மோதி விபத்திற்குள்ளானது.

விபத்தில் பொலிஸ் அதிகாரிகள் இருவரும் காயமடைந்தனர். அவர்களை பொதுமக்கள் வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார். அவர்கள் விரட்டிச் சென்ற லொறி தப்பியோடி விட்டது.

## தனிமைப்படுத்தலை முடித்த 156 பேர் நேற்று வீடுகளுக்கு

கொழும்பு, நவ.06

முப்படையினரால்கண்காணிக்கப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தனிமைப் படுத்தப்பட் டுள்ளவர்களில் 156 பேர் நேற்று தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு திரும்பினர்.

கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையில் இதுவரை 63,439 பேர் தனிமைப் படுத்தலை நிறைவு செய்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 33 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 2601 பேர் தொடர்ந்தும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 213 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஆழியவளையில் இருவர் கைது



யாழ்ப்பாணம், நவ.06

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை கடற்பரப்பில் 200 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை, உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை டோறா பிரிவினரால் நேற்று ஆழியவளை கடற்பரப்பிலிருந்து ஆறு கிலோ மீற்றர் எல்லைக்குள்வைத்து இருவரும்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து சுமார் 20க்கும் மேற்பட்ட பொதிகளில்200 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கஞ்சாவுடன் கைதான இருவரும் பளை பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## கேகாலையில் மண் சரிவு எச்சரிக்கை

கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மஞ்சள் விழிப்புணர்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய கேகாலை மாவட்டத்தில்ருவன்வெல்ல பிரதேச செயலர் பிரிவில் சில பகுதிகளுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட, எலப்பான, இரத்தினபுரி மற்றும் எஹெலியகொட ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலும் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக அந்த நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# யாழில் சுயதனிமைப்படுத்தலில் உள்ளோருக்கும் நிவாரணப்பொதி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கொழும்பு, நவ.06

கொரோனா தொற்று பரவல் காரணமாக யாழ்.மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தலில் உள்ள 772 குடும்பத்தைச் சேர்ந்த 1,700 பேருக்கு அரசினால் வழங்கப்படும் 5,000 ரூபா நிவாரணப்பொதி உடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுய தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் நாடு முழுவதும் வழங்கப்பட்டு வரும் நிலையில், யாழ். மாவட்டத்துக்கான இடர்கால நிவாரணப் பொதிகள் இதுவரை வழங்கப்படவில்லை என தெரியப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் பாராளுமன்ற அமர்வின் பின்னர் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு சென்று பேசியதன் பயனாக அந்தந்த கிராம சேவகர்கள் ஊடாக தனிமைப்படுத்தலில் உள்ள அனைவருக்கும் முதற்கட்டமாக நிவாரணப் பொதிகளை வழங்க சகல அரச அதிபர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தென்பகுதி மக்களுக்கு கிடைக்கும் நிவாரணங்கள் வடபகுதி மக்களுக்கு கிடைக்காமல் அரசு பாரபட்சம் காட்டுவதாகச் சிலர் பேசுவதில் எந்த உண்மையும் இல்லை. எனவே இது தொடர்பில் மக்கள் குழப்பம் அடைய வேண்டிய தேவையும் இல்லை-என்றார்.

## மின்சாரம், குடிதண்ணீரை சிக்கனமாக பாவியுங்கள்

கொழும்பு, நவ.06

நாட்டுமக்கள் மின்சாரத்தையும் குடிதண்ணீரையும் சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சக்திவள அமைச்சும், நீர் விநியோகச் சபையும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளன.

நாட்டின் சில இடங்களில் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதால் மின்சாரம் மற்றும் நீர்ப் பாவனை அதிகரித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் மக்கள் நீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்தாத பட்சத்தில் எதிர்காலத்தில் அவற்றை தடையின்றி விநியோகிப்பதில் சிக்கல் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பரவலுக்கு மக்களை அரசு குற்றம்சாட்டுவது தவறானது

## தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ.06

**கொரோனா தொற்றுக்கு பொதுமக்களை அரசு குற்றம்சாட்டுவது அரசினதும் அதன் தலைமைத் துவத்தினதும் அனுபவமின்மையை வெளிப்படுத்தி யுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் பரவல் என்பது சாதாரண விடய மில்லை. தனியொரு குழுவி னரால் இதற்குத் தீர்வை காண முடியாது. அரசுக்கு அனை வரினதும் ஆதரவு தேவை.

எனினும் அரசு ஏனையவர் களின் கருத்துக்களை செவி மடுக்க தயாரில்லை. இவ்வா றான நெருக்கடியான தருணத்தில் ஏனையவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து செயற்படுவது அவசியமான விடயம்.

இதுவே மிகச்சிறந்த தலை மைத்துவம். ஆனால் துரதிஷ் டவசமாக நாங்கள் எங்கள் கருத்துக்களை-யோசனைகளை முன்வைக்கும்போது அவர்கள் தங்களை காயப்படுத்தியதாக கருதுகின்றனர். தனிப்பட்ட விடயமாக கருதுகின்றனர்.

அவர்கள் மக்கள் மீதே முழு மையாக குற்றம்சாட்டுகின்ற னர். இது அரசின், அரச தலை வர்களின் அனுபவமின்மையை வெளிப்படுத்துகின்றது.

அரசு தனது அதிகாரங்கள் குறித்து அச்சப்படுகின்றது. வலுவான தலைமைத்துவம் இதனைச் செய்யாது - என்றார்.





# கொரோனாவிலிருந்து விடுபட யாழ்ப்பாணத்திலும் வழிபாடு

யாழ்ப்பாணம், நவ 06

கொவிட்-19 தொற்றிலிருந்து நாடும் நாட்டு மக்களும் விடு பட வேண்டி யாழ்ப்பாணம் பாணங்குளம் நாச்சி அம்மன் ஆலயத்தில் யாழ். மாவட்ட செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் சிறப்பு பூசை வழிபாடு இடம்பெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் வழிகாட்டுதலின் கீழ் புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அறி வுறுத்தலுக்கு அமைய மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வ தற்காக அருளாசி வேண்டி நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பிரார்த் தனை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்தவகையில் ஆலயத்தில் கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபட வேண்டியும் நாட்டு மக்களுக்கு அருளாசி வேண்டி யும் யாழ்.மாவட்ட செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட் டில் யாழ்ப்பாணம் பாணங் குளம் நாச்சி அம்மன்ஆலயத் தில் விசேட வழிபாடு நடத்தப் பட்டது. இந்த வழிபாட்டில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், மாவட்ட செயலக கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் தற் போது உள்ள சுகாதார நடை முறைக்கு ஏற்ப மட்டுப்படுத் தப்பட்டவர்களுடன் இந்த பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. (அ-3)

# 222 பொலிஸாருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, நவ 06

இலங்கையில் இதுவரை 222 பொலிஸார் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸ் நிலை யத்தில் 41 பொலிஸ் அலுவலர் களுக்கு நேற்று முன் தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனை யடுத்து, பொரளை பொலிஸ் நிலையத்தில் மாத்திரம் இது வரை 56 பொலிஸாருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தில் இதுவரை 24 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது. அத்துடன், அங்கு 2 ஆயிரத்து 193 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 34 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டிருப்பதாக மாவட்ட செயலாளர் எம். பி.ஆர்.புஸ்பகுமார தெரிவித் துள்ளார்.

இதனையடுத்து, அவர்களு டன் தொடர்புடைய சுமார் 1407 பேர் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். (அ)



# முல்லைத்தீவில் 500 பி.சி.ஆர்.

முல்லைத்தீவு, நவ 06

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவர் இனங் காணப்பட்டதை அடுத்து இவர்களுடன் தொடர்புடைய வர்கள் என்ற சந்தேகத்தில் 500 பேருக்கு மேல் பி.சி.ஆர் பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் த.காண்டீ பன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இடம் பெற்று வரும் கொரோனா வைரஸ் நிலைமைகள் தொடர் பான விசேட கலந்துரையாட லில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, முல்லைத்தீவு கேப்பாபுலவு விமானப்படைத் தளம், முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகத்தின் கீழ் உள்ள இராணுவப் பயிற்சி முகாம், புதுக்குடியிருப்பு 68ஆவது படைப்பிரிவின் திம்பிலிப் பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாம் ஆகியவற்றில் இயங்கிய 3 தனி மைப்படுத்தல் மையங்கள் மூடப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்க ளுடன் தொடர்பு உடையவர் கள் என்ற சந்தேகத்தின் அடிப் படையில் உள்ளவர்களை தற்போது வீடுகளில் தனிமைப் படுத்தும் நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் இந்த மூன்று தனிமைப்படுத்தல் மையங் களும் மூடப்படுகின்றன என வும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

# வவுனியா மாவட்டத்தில் 127 பேருக்குத் தொற்று

வவுனியா, நவ 06

வவுனியாவில் உள்ள நான்கு தனிமைப்படுத்தல் நிலையங் களில் உள்ளவர்களில் 127 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 1,154 பேர் வவுனியா மம்பைமடு இராணுவமுகாம், பெரியகட்டு ராணுவமுகாம், வேலங்குளம் விமானப்படைத்தளம், பூந் தோட்டம் கல்வியற்கல்லூரி ஆகிய நான்கு தனிமைப்படுத் தல் நிலையங்களில் தங்கவைக் கப்பட்டிருந்தனர். இவ்வாறு தங்கவைக்கப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவ்வாறு பி.சி.ஆர் பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டவர்களில் 127 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டு கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# உறவுகளை நினைவு கூரும் உரிமையை உறுதி செய்க!

## ஜனாதிபதிக்கு சிறிதரன் கடிதம்



கொழும்பு, நவ 06

தங்களது உறவுகளை நினைவு கூரும் உரிமையை உறு திப்படுத்தவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஜனாதிபதி கோட்டாபய வுக்கு அனுப்பி வைத்துள்ள கடி தத்திலேயே அவர் இந்தக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட வுள்ள நிலையில் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில், கடந்த ஆண்டு ஜனாதிபதியாக கோட் டாபய ராஜபக்?ஷ பதவியேற்ற சூழ்நிலையிலும், வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் தங் களது உறவுகளை நினைவு கூர முடிந்தது. அந்த நிலைமை இந்த ஆண்டும் தொடரவேண் டும் என அவர் தெரிவித்துள் ளார்.

# ஊரடங்கு உத்தரவுகளை மீறிய இரண்டாயிரத்து 393 பேர் கைது



கொழும்பு, நவ 06

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங் களில் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற் றும் களுத்துறை ஆகியே பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது 18 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பாக இரண்டாயிரத்து 393 பேர் கைது செய்யப்பட்டுள்ள துடன், 356 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

செய்திகள்

# மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம் உடன் மூடப்பட்டது

கொழும்பு, நவ 06

கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இருவர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதை அடுத்தே அதனை மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற சபையின் அடுத்த கூட்டம் நவ. 10

கொழும்பு, நவ 06

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பாராளுமன்றச் சபையின் கன்னிக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தக் கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முதலில் கருத்து தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்றச் சபைக்கு நியமிக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களையும் கௌரவத்துடன் வரவேற்றதுடன், எதிர்காலத்தில் மிகுந்த ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகரின் அறிவுறுத்தலுக்கமைய பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க, அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கமைய பாராளுமன்றச் சபையின் சட்டகட்டமைப்பு மற்றும் அதன் நடைமுறைகளை விளக்கினார்.

அதன்போது எதிர்காலத்தில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் பிரதமர் மஹிந்த கருத்து வெளியிட்டார். சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்த கலந்துரையாடலில் எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உறுப்பினர்கள் இடையே உடன்பாடு எட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமரின் பிரதிநிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க் கட்சித் தலைவரின் பிரதிநிதி கபீர் ஹாசிம், பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்க மற்றும் பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாராளுமன்றச் சபை எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது.

# ஏறாவூர் சந்தை மூடப்பட்டது

மட்டக்களப்பு, நவ 06

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.லதாகரனின் அறிவுறுத்தலுக்கமைய ஏறாவூர் புன்னைக்குடா வீதியிலுள்ள ஏறாவூர் பொதுச்சந்தை நேற்று வியாழக்கிழமை உடனடியாக மூடப்பட்டது.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள மிச்நகர் கிராமத்தில் நேற்று வியாழக் கிழமை முதல் முறையாக மீன் வியாபாரி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் நகர சபைத் தலைவர் இறம்ழான் அப்துல் வாஸித் தெரிவித்தார்.

ஏறாவூர் பொதுச் சந்தை வளாகத்தின் அனைத்துப் பகுதிகளும் கிருமி நீக்கி கொண்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டதோடு இந்தச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த அனைத்து வியாபாரி களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர். (அ)

# கடலிலே மூழ்க வேண்டாம் முடிந்தால் பதவி துறக்கவும்

## பவித்ராவுக்கு முஜிபுர் சவால்



கொழும்பு, நவ 06

**“கடலில் மூழ்கி உயிர் துறப்பதைக் காட்டிலும் சுகாதார அமைச்சர் பதவி துறப்பது மேலானது. எனவே, கடலில் குதிக்க துணிந்த அவர், நாட்டுக்காக பதவி துறக்கவேண்டும்.”-என்று என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் சவால் விடுத்துள்ளார்.**

தான் கடலில் மூழ்கிப் பலியானால் கொரோனா வைரஸ் ஒழியுமெனில் அதனைச் செய்வதற்கும் தயாரெனச் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றது. இந்நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதில் சுகாதார அமைச்சு தோல்வி கண்டுள்ளது. நிலைமை இப்படி இருக்கையில் நகைச்சுவைத்தனமான அறிவிப்புகளை சுகாதார அமைச்சர் விடுக்கின்றார். அவர் கடலில் மூழ்க வேண்டிய தேவையில்லை. பதவி விலகிச் சிறப்பாகச் செயற்படக் கூடிய ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்கினாலே அது பெரும் உதவியாக இருக்கும்.

கடலில் மூழ்குவதாக சுகாதார அமைச்சர் கூறிய பின்னர், இலங்கைக் கடற்பரப்பில் திமிங்கிலங்கள் கரையொதுங்குவதை காணமுடிகின்றது.

எனவே, அவர் கடலில் மூழ்க வேண்டியதில்லை, நாடுமீது அக்கறை இருந்தால் பதவி துறக்க வேண்டும். அதனை அவர் செய்வாரா?-என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக இரத்தத்தால் கையெழுத்திடுவேன்

## வடிவேல் சுரேஷ் எம்.பி கூறுகிறார்



கொழும்பு, நவ.06

"தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை வழங்குமாறு கோரி எவராவது மனுகொண்டுவந்தால் அதில் இரத்தத்தில் கையொப்பமிடுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொலையாளியை விடுதலை செய்யுமாறு கோரும் மனுவில் நான் கையொப்பமிடவில்லை. மலையக மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையில் எந்தவொரு முடிவையும் நான் ஒருபோதும் எடுக்கமாட்டேன். எனினும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி அரசோ அல்லது வேறு எவரோ மனு கொண்டுவந்தால் அதில் மலையக மக்களின் சார்பில் இரத்தத்தால் கையொப்பிடுவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளது. மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் உரிய சுகாதார வசதிகள் இல்லை. நிவாரணத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. ஜனாதிபதியின் ஒருவருடகால பயணம் என்பது தோல்வியில் முடிந்துள்ளது என்பது மட்டும் உறுதி-என்றார்.

# கிராம சேவையாளர் கொலை; பொலிஸ் விசாரணை தீவிரம்

மன்னார், நவ 06

மொட்டையான ஆயுதம் ஒன்றால் (மரக்கட்டை போன்ற) பல தடவைகள் தலையில் தாக்கப்பட்டதால் நிர்வாகக் கிராம அலுவலர் உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து குருதிக் கறையுடன் கோடரி அல்லது மண்வெட்டிப் பிடியின் சிறு துண்டு மீட்கப்பட்டு சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதனை வைத்துக் கொலையுடன் தொடர்புடையோர் தேடப்படுகின்றனர்.

நிர்வாகக் கிராம அலுவலரின் நிர்வாக ரீதியில் எழுந்த தனிப்பட்ட விரோதம் அல்லது தனிப்பட்ட பிரச்னை காரணமாக அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றும் விஜி என அழைக்கப்படும் எஸ். விஜியேந்திரன் (வயது-55) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கிச் சென்றுள்ளார். அதன்பின்னர் ஆத்திமோட்டை-கள்ளியடியில் தலையில் பலத்த காயங்களுடன் சுயநினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

அவர் உடனடியாக பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டது.

சம்பவம் நடந்த பகுதிக்கு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இ.கயஸ் பல்டானோ நேற்று முன் தினம் புதன்கிழமை மதியம் சென்று பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டார்.

சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.பிரணவன், திடீர் இறப்பு விசாரணை அதிகாரி றொஜன் ஸ்ரலின் ஆகியோரும் சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

நிர்வாகக் கிராம அலுவலர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் தலைக்கவசம் என்பன குருதிக் கறையுடன் காணப்பட்டன.

சடலம் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.பிரணவன் முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்டது.

நிர்வாகக் கிராம அலுவலரின் தலையில் தட்டையான பொருள் ஒன்றினால் பல தடவைகள் தாக்கியமையால் அவர் உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நிர்வாக கிராம அலுவலருக்கு நிர்வாக ரீதியில் தனிப்பட்ட பகை இருப்பது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்தப் பகை அவரது கொலைக்குக் காரணமாக இருக்கலாமா? அல்லது தனிப்பட்ட பகை காரணமாக இருக்கலாமா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இலுப்பக்கடவைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

செய்திகள்

# கோப்பாயில் கொரோனா மருத்துவமனை மக்கள் பீதியடையத் தேவையில்லை

## மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,நவ.06

**கோப்பாய் கொரோனா மருத்துவமனை தொடர்பில் மக்கள் பீதியடையத் தேவையில்லை என யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கீழ் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கான விசேட சிகிச்சை நிலையம் கோப்பாயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

இங்கு நேற்று முன்தினம் 18 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள்18 பேரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்திலிருந்தபோது அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கோப்பாய் விசேட சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கோப்பாய் விசேட சிகிச்சை நிலையத்தில் எமது மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள் அடங்கலாக அனைத்து உத்தியோகத்தர்களும் சிகிச்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த விசேட மருத்துவ நிலையத்தில் 350 பேருக்கு சிகிச்சையளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் நிலையாக சாதாரணமாகத் தொற்றுக்குள்ளானவர்கள் வேறு எந்தப் பிரச்னையும் இல்லாதவர்கள் இந்த மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு பின் அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இதேவேளை, கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் சில கட்டடங்கள் மாத்திரமே தங்கியிருக்கின்ற வசதியுள்ள கட்டடங்கள் மாத்திரமே மருத்துவ தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய கட்டடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது அதனை இலகுபடுத்த இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இதுதவிர கோப்பாய் பிரதேசத்திலுள்ள மக்கள் எந்தவித பயப்பீதியடையத் தேவையில்லை. ஏனெனில் நோயாளர்கள் சரியான முறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட்டு தெல்லிப்பழையில் எரியூட்டப்படுகிறது.

எனவே அப்பகுதி மக்களுக்கு தொற்று ஏற்பட வாய்ப்பில்லை. யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்கள் பலர் மிக அவதானமான முறையில் சுய பாதுகாப்பு அங்கிகள் அணிந்து சேவையை வழங்கி வருகின்றனர். ஆகவே, பொதுமக்கள் இது தொடர்பில் பீதியடையத் தேவையில்லை. உங்களுக்கு ஏதாவது முறைப்பாடுகள் இருக்குமாயின் யாழ். போதனா மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ள முடியும்.

யாழ். போதனா மருத்துவமனையில் ஒருநாளைக்கு 400 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன. இங்கு இரண்டு இயந்திரங்களைப் பயன்படுத்தி 7 பேர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். காலையில் 8 மணிக்குப் பரிசோதிக்கப்பட்டு இரவு 7 மணிக்கு பி.சி.ஆர். முடிவுகளை வெளியிடக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக எதிர்வரும் வாரம் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை சமூகத்தொற்று ஏற்படவில்லை. எதிர்வரும் காலங்களில் நடைபெறுபவற்றை சரியாக எதிர்வு கூறமுடியாது. பொதுமக்கள் சரியான விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்-என்றார். (எ-3)

# பாடசாலைகளை மூடியதன் விளைவு பல ஆண்டுகளுக்கு தாக்கம் செலுத்தும்

## ஜனாதிபதி கோட்டாபய எச்சரிக்கை



கொழும்பு,நவ.06

பாடசாலைகளை மூடியதன் விளைவு, குழந்தைகளின் கல்வியில் பல ஆண்டுகளுக்குத் தாக்கம் செலுத்தக்கூடும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இந்தச் செயலணிக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்று சுகாதாரம், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக, முழு உலகிலும் பல விதங்களில் தாக்கங்களைச் செலுத்தியுள்ளது.

இலங்கையில் முதல் கொரோனா தொற்றுக்குள்ளாகிய நபரை கடந்த மார்ச் மாதம் அடையாளம் கண்ட நாளிலிருந்து மக்களின் பாதுகாப்புக்கு ஒரு அரசாங்கமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இருப்பினும் இத்தொற்று கிருமிக்கு எதிராக நிரந்தர சிகிச்சை (மருந்து) இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், நாம் இனி நாட்டை முற்றாக மூடிவிட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்க முடியாது.

இதேவேளை, பாடசாலைகளை மூடியதன் விளைவு குழந்தைகளின் கல்வியில், பல ஆண்டுகளுக்குத் தாக்கம் செலுத்தக்கூடும். மேலும் அன்றாடம் தொழில் செய்பவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினர் மீது கொரோனா பாரியளவில் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையர்களாகிய நாம் அனைத்து அரசியல் சித்தாந்தங்களையும், வேறுபாடுகளையும் களைந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றுபட வேண்டும்.

சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும், நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்களையும், வழிகாட்டுதல்களையும் பின்பற்றுவதன் மூலமும் கொரோனாவைத் தோற்கடிக்க முடியும்-என்றார். (எ)

# சுங்க திணைக்கள அதிகாரிகள் 8 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,நவ.06

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் 08 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இதேவேளை இந்த ஊழியர்களுடன் நெருங்கிய தொடர்புளைப் பேணிய 75 பேரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (எ)

# கொழும்பிலேயே அதிக தொற்றாளர்கள் பதிவு

கொழும்பு,நவ.06

நாட்டில் நேற்று முன்தினம் பதிவான 443 புதிய கொரோனா நோயாளர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி பொரளையில் அமைந்துள்ள குடியிருப்புத் தொகுதியிலிருந்து 138 பேரும், கொழும்பு வடக்கிலிருந்து 21 பேரும், கொழும்பு துறைமுகத்திலிருந்து 11 பேரும், 42 பேர் கொழும்பின் வேறு பல இடங்களிலிருந்தும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனக் கண்டறியப்பட்டனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்து 62 பேரும், களுத்துறையிலிருந்து 20 பேரும், இரத்தினபுரியிலிருந்து 09 பேரும், நுவரெலியாவிலிருந்து 06 பேரும், கண்டி மற்றும் மாத்தறையிலிருந்து தலா மூவரும், காலி மற்றும் குருநாகலிருந்து தலா ஒவ்வொருவரும் அடையாளம் காணப்பட்ட புதிய கொரோனா நோயாளர்களுள் அடங்குவர்.

அதுமாத்திரமன்றி தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 25 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 5 ஊடகவியலாளர்களுக்கும் கொரோனா தொற்றிருப்பது கண்டறியப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாத்திரம் 94 பொலிஸார் கொரோனா தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது. அவர்களில் 17 பேர் கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர்கள் ஆவர்.

தற்போது நாடு முழுவதும் 12 ஆயிரத்து 187 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 5,858 ஆகபதிவாகியுள்ளது.

இரு வெளிநாட்டினர் உட்பட 6,305 பேர் நாடு முழுவதுமுள்ள 48 மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருவதுடன், கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் 400 பேர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். (எ)

# ஊரடங்கு நீக்கப்பட்டாலும் சுகாதார ஆலோசனைகளை கடைப்பிடிப்பது அவசியம்



கொழும்பு,நவ.06

மேல் மாகாணத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் என்று கொரோனா பரவல் தடுப்பு தேசிய செயல்பாட்டு மையத் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டாலும் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடித்து செயல்படுவது அனைவரின் பொறுப்பாகும்-என்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். (எ)

உலகச் செய்திகள்



## அதிக வாக்குகள் பெற்று ஜோ பைடன் சாதனை

வாஷிங்டன், நவ. 06

அமெரிக்க வரலாற்றில் அதிக வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் என்ற பெருமையை ஜோ பைடன் பெற்றுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப், ஜன நாயகக் கட்சியின் சார்பில் ஜோ பைடனும் போட்டி யிடுகின்றனர்.

நேற்றுமுன்தினம் வெளியாகத் தொடங்கிய தேர்தல் முடிவு களின்படி ஜோ பைடன் முன்னிலையில் உள்ளார். எனினும் வாக்கு எண்ணிக்கை இன்னும் முடிவடையாத சூழலில் தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், நேற்றிரவு வரை எண்ணப்பட்ட வாக்கு களின் அடிப்படையில், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் அமெரிக்க வரலாற்றிலேயே அதிக வாக்கு களைப் பெற்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா வின் சாதனையையும் முறியடித்துள்ளார்.

7 கோடியே 20 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன. இதுவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட்ட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளை விட இது அதிக மாகும்.

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்:

# வெற்றியை நெருங்கும் பைடன் இன்னமும் 6 வாக்குகளே தேவை

வாஷிங்டன், நவ. 06

அமெரிக்க தேர்தல் முடிவு கள் அறிவிக்கப்பட்டு வருகின் றன, இதில் அமெரிக்க ஜனாதி பதியாகப் பதவியேற்கத் தேவை யான 270 பிரதிநிதிகள் சபை வாக்குகளை நோக்கி ஜனநாய கக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் முன்னேறி வருகிறார் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



இதுவரை ஜோ பைடன் 264 பிரதிநிதிகளின் வாக்குகளுடன் முன்னிலை வகிக்கிறார், ட்ரம்ப் 214 வாக்குகளுடன் பின்தங்கி யுள்ளார்.

விஸ்கான்சின், மிச்சிகன் மாகாணங்களையும் ஜோ பைடன் வென்றுள்ளார். நேற்று முன்தினம் ட்ரம்ப் தான் வெற்றி பெற்றதாக முழக்கமிட்டார். இன்று பல மாநிலங்களில் சட் டப் போராட்டத்தை நடத்தி வருகிறார்.

தேர்தலில் மோசடி நடந் துள்ளது என்று தொடர்ச்சியா கக் கூறிவரும் ட்ரம்ப், பென்சில் வேனியா வாக்கு எண்ணிக்கை மீது சந்தேகம் வெளியிட்டது டன், உயர் நீதிமன்றையும் ட்ரம்ப் நாடியுள்ளார்.

பைடன் மிக்சிக்கன் மாகா ணத்தில் பெற்ற வெற்றி அவர் வெள்ளை மாளிகைக்கு செல் வதை உறுதியாக்கியுள்ளது. நெவாடா, அரிசோனா மாகா ணங்களிலும் பைடன் முன் னிலை பெற்றுள்ளார். இந்த மாகாணங்களில் வெற்றி பெற்றுவிட்டால் அவர் ஜனாதி பதியாக தெரிவாகிவிடுவார்.

இந்நிலையில், “எங்கள் வழக் கறிஞர்கள் வாக்கு எண்ணிக் கையை அணுக வேண்டும் என்று கேட்டனர். ஆனால் என்ன பயன்? ஏற்கனவே நம் அமைப்பின் நேர்மைக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு விட்டது. ஜனாதிபதி தேர்தலுக்கே சேதம் விளைவிக்கப்பட்டு விட்டது. இதைத்தான் விவாதிக்க வேண் டும்”, என்று ட்ரம்ப் இப்போது தெரிவித்து வருகிறார்.

இதேநேரம், ஜோர்ஜியா, மிச்சிகன், பென்சில்வேனியா ஆகிய மாகாணங்களில் மீள் வாக்கெடுப்பு நடத்தப்பட நடத் தப்பட வேண்டும் என்றும் ட்ரம்ப் வழக்குகள் தொடுத் துள்ளார்.

இந்நிலையில், பைடன், “இங்கு மக்கள்தான் ஆட்சி செய்கிறார்கள். அதிகாரத்தை நம் சொந்த விருப்பு வெறுப்பிற்காக அறிவிக்க முடியாது” என்று கூறியுள்ளார்.

(ஐ)

### வைரஸ்களை பரப்புகின்றனவாம்

## 1.7 கோடி மிங் விலங்குகளை கொல்ல டென்மார்க் முடிவு

கொபன்ஹேகன், நவ. 06

தோலுக்காக வளர்க்கப்படும் மிங் (mink) எனப் படும் சிறிய பாலூட்டி விலங்குகள் அனைத் தையும் கொன்றொழிக்க டென் மார்க் அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி நாடு முழுவதும் பண்ணை களில் உள்ள சுமார்



ஒரு கோடியே 70 இலட்சம் மிங் விலங்குகள் அடுத்துவரும் நாட் களில் கொல்லப்படவுள்ளன என்ற அதிர்ச்சித் தகவல் வெளி யாகி உள்ளது.

மிங் விலங்குகள் ஊடாக வைரஸ் தொற்றுக்கு இலக்கா கிய சிலரில் மேற்கொள்ளப் பட்ட பரி சோதனைகள் “கொவிட் 19” வைரஸின் மாற்ற மடைந்து தீவிரம் பெற்ற ஒரு வடிவத்தை வெளிப்படுத்தி உள்ளன. அது மனித நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீன மாக்கும் தன்மையை அதிகம் கொண்டிருப்பதால் எதிர்காலத் தில் தடுப்பு மருந்துகளின் செயல்பாட்டுத் திறனை அது கேள்விக்குள்ளாகலாம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இத்தகைய ஆபத்தைக் கவனத்தில் கொண்டே மிங் விலங்குகளைக் கூண்டோடு ஒழித்துவிடத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக டென்மார்க் பிரதமர் மெற் பிரெட்றிக்சென் தெரிவித்திருக் கிறார்.

கனத்த மனதுடன் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளார் எனக் கூறியுள்ள அவர், வாழ்வாதாரத் தொழிலை இல்லாதொழிப் பதற்காக நாடு முழுவ தும் உள்ள மிங் பண்ணையா ளர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

உலகில் குளிர்கால ஆடைகளுக்குப் பயன்படுத் தப்படும் மிங் தோலை ஏற்றுமதிக்காக பெருமள வில் உற்பத்திசெய்யும் முதல் நாடு டென்மார்க் ஆகும்.

விலங்குகள் அனைத்தையும் கொல்லும் முடிவு அடுத்த சில வருடங்களில் மிங் பண்ணைத் தொழிலை அங்கு முற்றாக முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என்று தெரிவிக்கப்படு கிறது.

அண்மையில் இதே போன்று நெதர்லாந்தின் மிங் பண்ணைகளில் இருந்து பலருக்கு வைரஸ் தொற்றிய தை அடுத்து அந்நாட்டிலும் ஆயிரக்கணக்கில் விலங்குகள் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒவ்வொரு வாக்கையும் எண்ண வேண்டும்

### நியூயோர்க்கில் போராட்டம்

நியூயோர்க், நவ. 06

அமெரிக்க ஜனாதிபதி தேர் தலில் வாக்கு எண்ணிக்கை தாமதமாகியுள்ளது. இந்நிலை யில், ஒவ்வொரு வாக்கும் எண்ணப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நியூயோர்க் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணி நடத்தினர்.

இம்முறை தேர்தலில் கொரோனா தொற்று அச்சம் காரணமாக அதிகளவில் தபால் மூல வாக்குகள் பதிவாகின. தபால் மூல வாக்குகளைஅதிக அளவில் ஜோ பிடன்தான் பெற்று வருகிறார்.

தாமதம் காரணமாக குறிப் பிட்ட கால அளவுக்குள் வாக்கு எண்ணிக்கையை முடிப்பது குறித்துப் பேசப்படுகின்றது. இந்நிலையில் அனைத்து வாக்குகளும் எண்ணப்பட வேண் டும் என்று மக்கள் போராட்டம் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

நீதியையும் நியாயத்தையும் ஜனநாயகத்தையும் கொண் டாடும் வகையில், நியூயோர்க் நகரில் தொடங்கிய இந்தப் பேரணி வாஷிங்டன் சதுக் கத்தை நோக்கிச் சென்றனர்.

மிச்சிகன் மற்றும் பென்சில் வேனியா மாகாணங்களில் வாக்கு எண்ணிக்கையை நிறுத்துவதற்காக வழக்குத் தொடுக்கப் போவதாக டிரம்ப் அணி அறிவித்த நிலையில் இந்தப் போராட்டம் தொடங்கி யது.

பேரணி சென்ற பாதையில் சிறுசிறு வன்முறைகள் இடம் பெற்றன. இதனால் 20 பேர் வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். என்னும் பேரணி அமைதியாகத் தொடர் கிறது.

(அ)

## 2ஆம் கட்ட ஊரடங்கால் முடங்கியது இங்கிலாந்து

லண்டன், நவ. 06

இங்கிலாந்தில் இரண்டாம் கட்ட ஊரடங்கு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. இது டிசம்பர் 2ஆம் திகதி வரை தொடரும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வந்ததையடுத்து, மீண்டும் ஊரடங்கை கடந்த வாரம் பொரிஸ் ஜோன்சன் அறிவித்தார். மேலும், தேவை யற்ற காரணங்களுக்காக மக்கள் பயணிப்பதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இங்கிலாந்தில் கடந்த சில வாரங்களாக கொரோனாவில் பாதிக்கப்படுவோர் எண் ணிக்கை ஆயிரக்கணக்கில் அதி கரித்தது. உயிரிழப்பும் நூற்றுக் கணக்கில் உயர்ந்தது. இதைய டுத்து அங்கு இரண்டாம் கட்டமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



செய்திகள்

# கிளினிக் நோயாளர்களுக்கு வீடுகளுக்கே மருந்து வழங்குவது வடக்கிலும் ஆரம்பம்

## மாகாண சுகாதார பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.06

அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட தொற்றா நோயாளர்களுக்கான மருந்துகளை தபால் மூலம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கோரோனா தொற்று நோயின் பரவல் காரணமாக தொற்றா நோய்களுக்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்கள் தமக்குரிய மருந்துகளைக் கிரமமாகப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைத் தவிர்ப்பதற்காக சுகாதார அமைச்சு அஞ்சல் திணைக்களத்துடன் இணைந்து பொலிஸாரின் உதவியுடன் அரச வைத்தியசாலைகளில் பதிவு செய்துள்ள தொற்றா நோயாளர்களுக்கான மருந்து வகைகளை தபால் திணைக்களத்தின் உதவியுடன் அவர்களது வீட்டுக்குக் கொண்டு சென்று வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

எனவே வடக்கு மாகாணத்தின் அனைத்து அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை நிலையங்களில் தொற்றா நோய்களுக்காக சிகிச்சை பெறும் நோயாளர்கள் தங்களுக்குரிய வைத்தியசாலைகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அவர்களின் சரியான பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பதிவு செய்யப்பட்ட சிகிச்சை நிலைய இலக்கம் (கிளினிக் இலக்கம்) என்பவற்றை அறிவித்து தமக்கான மருந்துகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளுக்குமுரிய தொலைபேசி இலக்கங்களை பின்வரும் வழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கம் 021 222 6666 வட மாகாண சபையின் இணையத்தளம் www.np.gov.lk வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் முகநூல் (Kftup COVID 19, PDHS, NP)

குறிப்பு: மேற்குறிப்பிட்ட வழிமுறைகளினூடாக தங்களுடைய மருந்துகளை பெற்றுக்கொள்வதில் ஏதாவது சிரமங்கள் ஏற்படின் அவசர தொலைபேசி இலக்கத்துடன் (021 222 6666) தொடர்பு கொள்ளவும்-என்றுள்ளது.

# வெலிக்கடை சிறைக்குள் நுழைந்தது கொரோனா!

## ஆறு கைதிகள் உட்பட 7 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, நவ.06

**வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள ஆண் கைதிகள் இருவர், பெண் கைதிகள் 4 பேர் மற்றும் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் என ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

இந்தத் தகவலை சிறைச்சாலை ஆணையாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் தொற்றுக்கு உள்ளானவர்கள் சிகிச்சைக்காக கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாட்டுடன் மோ.சைக்கிள் மோதி இளைஞர் படுகாயம்

வவுனியா, நவ.06

வவுனியா, சூடுவெந்தபுலவுப் பகுதியில் வீதியில் உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வேலைக்குச் சென்றிந்த இளைஞன் கடமைகளை முடித்துக்கொண்டு வீரபுரம் நோக்கி வவுனியா செட்டிகுளம் பிரதான வீதியூடாகச் சென்றுள்ளார்.

சூடுவெந்தபுலவு பகுதியை அண்மித்தவேளை வீதியில் உறங்கிக்கொண்டிருந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த உளுக்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 765 பேர் குணமடைவு

கொழும்பு, நவ.06

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 765 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொ?ரோனா தொற்றில் இருந்து இதுவரை 6 ஆயிரத்து 623 பேர் இதுவரை பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

நாட்டில் இதுவரை 12 ஆயிரத்து 187 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 6 ஆயிரத்து 623 பேர் குணமடைந்துள்ள நிலையில், 5 ஆயிரத்து 540 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# புதுமணத் தம்பதி உட்பட 9 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ.06

மாவனல்லையில் அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த தம்பதியினர் உள்ளிட்ட 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்தத் திருமண வைபவத்தில் கலந்துகொண்ட 120 க்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மாவனல்லை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கெமுனு விக்ரமசிங்க தெரிவித்தார்.

இந்தத் திருமண வைபவம் சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக இடம்பெற்றுள்ள போதும் இரண்டாவது நாள் மணமகனின் வீட்டில் நடத்தப்பட்ட வைபவத்தில் சுகாதார வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த மணமகன் கொழும்பு பொலிஸ் நிலையம் ஒன்றில் பணிபுரிபவர் எனவும் அந்தத் திருமண வைபவத்துக்கு கொழும்பில் இருந்தும் சிலர் வந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளான மணப்பெண் உந்துகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, மணமகன் கேகாலை மாவட்ட தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் சிகிச்சை மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பொலிஸாருக்கு தொற்று

# பதுளை நீதிமன்றத்தின் செயற்பாடுகள் நிறுத்தம்

கொழும்பு, நவ.06

பதுளை மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றில் ஆஜராகிய சி.ஐ.டி. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால், பதுளை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர், கொழும்பிலிருந்து பதுளை வந்து, பதுளை மேல் நீதிமன்றவழக்கொன்றில் நேற்று முன்தினம் ஆஜராகியிருந்தார்.

இதையடுத்து அவருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டமையால், அவர் உடன் பி.சி.ஆர். பரிசோதனைக் குட்படுத்தப்பட்டார். பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து, பதுளை மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், பசறை சுற்றுலா நீதிமன்றம், பதுளை தொழில் மன்றம் ஆகியவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய பதுளை மேல் நீதிமன்றவழக்குகள் அடுத்த மாதம் 18ஆம் திகதியும் அதைத் தொடர்ந்த திகதிகளிலும் ஏனைய நீதிவான் நீதிமன்ற வழக்குகள் அடுத்த மாதம் 15ஆம் திகதியும் அதற்குப் பின்வரும் திகதிகளிலும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இத்தகவல்களை பதுளை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவர் சட்டத்தரணி கந்தசாமி இரமேஸ்குமார் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி பசறை பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றிவருவதும் தெரிய வந்துள்ளது.

# வருமான வரிப் பரிசோதகர் மீது உடனடி நடவடிக்கை வேண்டும்

## வலி.தெற்கு பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.06

மருதனார்மடம் பொதுச் சந்தை வருமான வரிப் பரிசோதகராகக் கடமையாற்றியவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலி. தெற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மருதனார்மடம் பொதுச் சந்தை வருமான வரிப் பரிசோதகர், சுமார் 3 மாதங்களாகச் கடமைக்கு சமூகமளிக்காமல் இருந்துள்ளார். அவர் சந்தையின் ஆவணங்களுடன் இவ்வாறு தொடர்பின்றி இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக கடமைக்குத் திரும்பிய அவர் வலி.தெற்குப் பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்துக்கு செயலாளரால் இணைக்கப்பட்டுள்ளார்.

எந்தவொரு அறிவித்தலுமின்றி கடமைக்குச் சமூகமளிக்காத உத்தியோகத்தர் தாமாகப் பதவி விலகியதாகக் கடிதம் அனுப்பப்பட்ட பின்னர் செயலாளர், அவரை ஏழாலை உப அலுவலகத்துக்கு மாற்றியமையை ஏற்க முடியாது என்று வலி.தெற்கு பிரதேச சபையின் நேற்றைய சிறப்பு அமர்வில் உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அதனால் வருமான வரி பரிசோதகர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வலி. தெற்கு பிரதேச சபையின் நேற்றைய சிறப்பு அமர்வில் எதிர்ப்பின்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர், சில உத்தியோகத்தர்களுக்கு சார்பாக செயற்படுவதாகவும் உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

செய்திகள்



# இனந்தெரியாத நபர்களால் பிள்ளையார் சிலை உடைப்பு

மட்டக்களப்பு,நவ.06

மட்டக்களப்பு வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப் பிள்ளையார் ஆலயத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் சிலை இனம்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

70 வருட கால பழமை வாய்ந்த இரண்டரை அடி உயரமுள்ள சிலையே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதால் மக்கள் நடமாட்டம் இல்லாத நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ)

# வீடுகளுக்குள் கொரோனா

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு,நவ.06**

**கொரோனா வைரஸ் தற்போது வீடுகளுக்குள் நுழைந்துள்ளதால் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று தீவிரமடைந்துள்ள அதேவேளை இந்தத் தொற்றால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளதாலும் நாடு மிகவும் ஆபத்தான நிலையில் பயணிக்கிறது என்பதை அறியமுடிகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் கொரோனா தொற்றால் 11 மரணங்கள் பதிவாகியுள்ளமை மிகவும் ஆபத்தான நிலை என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நாட்டில் முதலாவது கொரோனா தொற்றின் போது 9 மாதங்களில் 13 மரணங்கள் மாத்திரமே பதிவாகின.

இருப்பினும் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் 11 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களுள் சிலர் உயிரிழந்த பின்னரே கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தமை இனங்காணப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்காலத்தில் கொரோனா தொற்றால் உயிரிழப்பு வீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது-என்றார். (எ)

# இ.போ.ச. பதுளை சாலையில் பணியாற்றும் எட்டுப்பேர் குடும்பத்துடன் தனிமைப்படுத்தல்

பதுளை,நவ.06

இலங்கை போக்குவரத்துச் சபையின் பதுளை சாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் 8 பேரும் அவர்களின் குடும்பத்தினரும் கொரோனா தொற்று அச்சுறுத்தலால் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இ.போ.ச. பதுளை சாலை பேருந்துகளில் வழமையாகப் பயணிப்பவர்களுக்கான மாதாந்த பருவகாலச்சீட்டுக்களை வழங்குபவர் மற்றும் பேருந்து நடத்துநர்களிடமிருந்து நாளாந்தம் பணம் பொறுப்பேற்கும் அதிகாரி உள்ளிட்ட எட்டுப் பேரும், அவர்களின் குடும்பத்தினரும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகவலை பதுளை மாநகர சபை பொதுச் சுகாதாரப் பணியகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

கொரோனா தொற்றாளரான பொலிஸ் உத்தியோகத்தரொருவர் கொழும்பிலிருந்து இ.போ.ச பதுளை சாலை ஊழியர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்தத் தகவல் பதுளை மாநகர சபை பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு கிடைத்ததையடுத்து பொதுச் சுகாதாரப் பிரிவினர் விரைந்து இ.போ.ச பதுளைசாலை ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை சுயதனிமைப்படுத்தினர். அத்துடன் கொரோனா தொற்றுடன் பதுளைக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுஎனபொதுச்சுகாதாரப் பணியகத்தினர் தெரிவித்தனர். (எ)

# சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை அடுத்தவாரம் கடுமையாக்கப்படும்

## அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு



கொழும்பு,நவ.06

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அடுத்தவாரம் முதல் கடுமையான முறையில் செயல்படுத்தப்படும். எனவே, பொது மக்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் அன்றாடச் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மேல் மாகாணம் உட்பட பெரும்பாலான பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகொள்ள முடியும்.

மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் இவ்வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் வாரம் முதல் கடுமையாகச் செயல்படுத்தப்படும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே இந்நெருக்கடி நிலையை வெற்றிகொள்ள முடியும். ஆகவே பொது மக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்-என்றார். (எ)

# சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து பொதுஜன பெரமுன கூட்டு கருத்தரங்கு

கொழும்பு,நவ.06

அரசியல் மட்டத்தில் நிறுவனக் கட்டமைப்புகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதே சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒன்றிணைந்து பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்திருந்த கூட்டுக் கருத்தரங்கின் பிரதான நோக்கமாகும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, நிர்வாக அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் வகையிலான கூட்டுக் கருத்தரங்கு ஒன்றை சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து நடத்தியது.

இணையவழியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கை இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்துடன் இணைந்து பொதுஜன பெரமுனவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அரசியலில் ஒவ்வொரு கட்டமைப்புக்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் மக்களுக்கு இடையிலான தொடர்புகளை




வலுப்படுத்துவது தொடர்பில் ஆராய்தல் ஆகியவையே இந்தக் கூட்டுக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம் என்று சீனா தெரிவித்துள்ளது.

இதேவேளை, இக்கருத்தரங்கு தொடர்பில் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சீனத்தூதரகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிர்வாக அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான கருத்தரங்கில் பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன். அரசியல் மட்டத்திலும் மக்கள் மட்டத்திலும் நிறுவனக் கட்டமைப்புக்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். எதிர்காலத்தில் இளைஞர்கள் இதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இக்கூட்டுக் கருத்தரங்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (எ)

# பருத்தித்துறை கிளினிக் நோயாளருக்கு வீடுகளுக்கு மருந்துகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.06

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் தேவையற்ற விதத்தில் மருத்துவமனைக்கு வருகை தருவதைத் தவிர்க்க, உங்கள் மாதாந்த கிளினிக்குக்கான மருந்துகளை எதிர்வரும் புதன்கிழமையிலிருந்து வீடுகளுக்கு வந்து நேரடியாக விநியோகிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்தவகையில் அதற்குரிய ஆயத்தப் பணிகளை தற்போது மேற்கொண்டு வருகின்றோம். எனவே இப்பணியை இலகுபடுத்த வசதியாகத் தங்களிடமிருந்து உறுதியான சில தகவல்களை எதிர்பார்க்கின்றோம் என பருத்தித்துறை ஆதார மருத்துவமனை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்து கிளினிக் நோயாளர்களும் மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு (தொலைபேசி இலக்கம் : 0773180357) இன்றிலிருந்து தினந்தோறும் 24 மணிநேரமும் தகவல்களைத் தெரிவிக்க முடியும்.

1.முழுப்பெயர்

2.வதிவிட முகவரி, தொலைபேசி இலக்கம்.

3.கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு

4.கிளினிக்கின் பெயரும், இலக்கமும்.

5.கிளினிக்கு வரவேண்டிய திகதி. இந்நடைமுறையை உரிய முறையில் செயல்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம்-என்று குறிப்பிட்டுள்ளனர். (எ-3)

செய்திகள்

# மருதனார்மடம் சந்தையில் 164 வியாபாரிகளுக்கு இடம்

## விவசாயிகளும் விற்பனை செய்ய அனுமதி



**யாழ்ப்பாணம், நவ. 06**

**மருதனார்மடம் பொதுச் சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் 164 வியாபாரிகளுக்கு இட ஒதுக்கீடு வழங்க வலி. தெற்கு பிரதேச சபை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி ஒவ்வொரு வியாபாரிக்கும் தலா 42 சதுர அடி இடத்தை ஒதுக்கீடு செய்து வழங்க சபை தீர்மானித்துள்ளது.**

வலி. தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உள்பட்ட மருதனார்மடம் பொதுச் சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் இட ஒதுக்கீடு விவகாரத்தில் வியாபாரிகளில் ஒரு பகுதியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டு வந்தனர். தமக்கு வழங்கத் தீர்மானித்துள்ள இடம் போதுமான அளவு இல்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இட ஒதுக்கீடு தொடர்பில் தமக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தையும் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில், வலி. தெற்கு பிரதேச சபையின் சிறப்பு அமர்வு நேற்று தவிசாளர் தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் வியாபார நடவடிக்கைகளுக்காக 164 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு தலா 42 (6X7) சதுர அடி இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு சபை ஒப்புதல் வழங்கியது.

இதேவேளை, விவசாயிகளுக்கு என தனியாக ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்றும் அதில் அவர்கள் விவசாய சம்மேளனத்தின் அனுமதியுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்ற நடைமுறையைக் கொண்டு வரவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர், சுரேஷ் முன்மொழிவை முன்வைத்தார். அதற்கும் இணக்கம் எட்டப்பட்டது.

# திமிங்கிலங்கள் ஏன் கரைக்கு வந்தன? நளின் பண்டார எம்.பி. புதுவிளக்கம்



கொழும்பு, நவ. 06

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கடலில் குதித்துவிடுவார் என்ற அச்சத்தாலேயே திமிங்கலங்கள் கரைக்கு வருகின்றன என்று கிண்டலடித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நளின் பண்டார.

நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'கொரோனா வைரஸை ஒழிப்பதற்காக, கடலிலும் குதித்து என்னுயிரை மாய்த்துக் கொள்வேன்", என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், களுத்துறை பாணாந்துறையில் நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள் அண்மையில் கரை ஒதுங்கின. இந்த இரு விடயங்களையும் சேர்த்தே அவர் அமைச்சர் பவித்ராவை கேலி செய்துள்ளார்.

# கிராம அலுவலர் படுகொலை உரிய நடவடிக்கை அவசியம்

## அமைச்சர் சமலுக்கு செல்வம் எம்.பி. கடிதம்

மன்னார், நவ. 06

'மன்னார் கிராம உத்தியோகத்தர் எஸ்.விஜேயேந்திரன் (வயது 55) கொலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்", என்று கோரி உள்நாட்டு அலுவல்கள் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு அமைச்சர் சமல் ராஜபக்ஷவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மன்னார் இலுப்பை கடவையின் கிராம உத்தியோகத்தரான எஸ். விஜயேந்திரன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீதியில் சடலமாகக் காணப்பட்டார். இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றுது இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அமைச்சருக்கு கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

அதில், "மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும் இலுப்பைப் கடவை கிராம உத்தியோகத்தர் எஸ்.விஜயேந்திரன் என்வரின் கொலையை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். குறித்த சம்பவங்கள் சட்டம், ஒழுங்கு சார் பிரச்னையை தோற்றுவிப்பதோடு எமது பகுதியில் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் என்பதனையும் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். மேலும், இந்த கொலையின் பின்னணியில் உள்ள நபர்கள் யார்? என்பதனை இனங்கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனையை வழங்க வேண்டும்", என்றுள்ளது.

# வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கொலை மிரட்டல்

## சபையின் தலைவர் குற்றச்சாட்டு



வடமராட்சி, நவ. 06

'வல்வெட்டித்துறை நகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சதீஸ், ஏனைய உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்ததுள்ளார்", என்று சபையின் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்தக் குற்றச்சாட்டை அவர் விடுத்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"முக்கியமான தீர்மானங்கள் சிலவற்றை எடுப்பதற்காக நேற்று வியாழக்கிழமை வல்வெட்டித்துறை நகர சபையின் சிறப்பு அமர்வு கூட்டப்பட்டது. நீச்சல் தடாகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் குறித்தும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் ஆலோசனைகள் பெறப்பட்டன.

"இவற்றில் வல்வெட்டித்துறை பொது மைதானம் சம்பந்தமாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது, அந்தத் திட்டத்தைக் குழப்பும் விதமாக சுயேச்சைக் குழு உறுப்பினர் கஜேந்திரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சதீஸூம் ஆரம்பத்திலிருந்தே ஈடுபட்டனர். இதன்போது, உறுப்பினர் சதீஸ், ஏனைய உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தார். அத்தோடு சபையில் பயன்படுத்த முடியாத தகாத வார்த்தைகளையும் அவர் பிரயோகித்தார். இதனால் அவரை சபையிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சி எடுத்த போது, அதனையும் குழப்பினார்.

"அந்த உறுப்பினர்களின் செயல்பாடுகள் கழுகுகள் கழகத்துக்கு பொது மைதானத்தை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இருந்தது. கடந்த 20 வருடங்களாக பொது விளையாட்டு மைதான வழக்கை வல்வெட்டித்துறை நகர சபை தான் முன்னெடுத்து வருகின்றது. அந்த செயல்பாடுகளுக்கு ஆதரவளித்த சதீஸ் உள்ளிட்ட உறுப்பினர்கள் அனைவரும் பொது விளையாட்டு மைதானத்தைச் சுவீகரிப்பது என்ற தீர்மானத்தை எடுக்கவிடாது குழப்பியடித்தனர்.

"இவர்கள் தொடர்ச்சியாகவே தவிசாளரது கட்டளைக்குப் பணியாமல் கூட்ட நடைமுறைகளுக்கு மாறாக தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றனர். எனவே இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரை சந்தித்து முறைப்பாடு செய்யத் திட்டமிட்டுள்ளேன்" - என்றார்.

# தனிமைப்படுத்தல் முடிந்து திரும்பியவர் திடீர் மரணம்

புத்தளம், நவ. 06

இரண்டு வார தனிமைப்படுத்தலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் வீதியிலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. 55 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தார். குறித்த நபர் கொழும்பில் ஹோட்டல் ஒன்றில் பணியாற்றினார் என்று கூறப்பட்டது. புத்தளம் பொலிஸாரும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர்.

உயிரிழந்தவரின் இரத்த மாதிரிகள், பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# கரவெட்டியில் 66 பேருக்கு பி.சி.ஆர்.

வடமராட்சி, நவ. 06

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 66 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

கொரோனா தொற்றுப் பரவலின் பின்னர் கொழும்பிலிருந்து வந்த இவர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். இதைத் தொடர்ந்தே இவர்களுக்கு நேற்று பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டது.

இவற்றின் மாதிரிகள் ஆய்வுக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முடிவுகள் இன்றையதினம் கிடைக்கலாம் என்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-2)




# 50 வென்டிலேட்டர்கள் சிங்கப்பூர் அன்பளிப்பு

கொழும்பு, நவ. 06

இலங்கையில் கொரோனா சிகிச்சை சேவையைப் பலப்படுத்தும் நோக்கில் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்று 8 கோடி ரூபா பெறுமதியான 50 வென்டிலேட்டர்களை சுகாதார அமைச்சிடம் நேற்றுக் கையளித்துள்ளது.

சிங்கப்பூரின் டிம்செக் நிதியம் இந்த அன்பளிப்பை செய்துள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் இலங்கையின் மெட் ரெக்னோலோஜி ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் கபில கீதனகே இந்த வென்டிலேட்டர்களை கையளித்தார்.

ஈழநாடு
Eelanadu

# இறுதிக்குள் நுழைந்தது மும்பை இந்தியன்ஸ்



டுபாய், நவ. 06

டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 57 ஓட்டங்களால் வெற்றி கொண்டு இறுதியாட்டத்திற்கு முதல் அணியாக முன்னேறியது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கும் ஐ.பி.எல்லின் 13ஆவது தொடரின் முதல் குவாலிபையர் போட்டி நேற்றிரவு டுபாயில் நடந்தது. இதில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு குயின்ரன் டி கொக், ரோஹித் சர்மா இணை தொடக்கம் கொடுத்தது. கொக் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தார். ஆனால், எதிர்கொண்ட முதல் பந்திலேயே எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் ரோஹித் சர்மா.

ஆனாலும், அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் வழக்கம்போல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில், 25 பந்துகளை எதிர்கொண்ட கொக் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸரை விளாசி 40 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

யாதவுடன் இணைந்த இஷான் கிஷன் தனது பங்குக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தொடர்ந்து அதிரடியாக ஆடி அரைச்சதம் அடித்த யாதவ் நோர்ட்ஜேயின் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது அவர் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த பொலார்ட் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த குர்னல் பாண்ட்யாவும் (13) நிலைக்கவில்லை. அடுத்து வந்த ஹார்திக் பாண்ட்யா அதிரடியாக ஆடினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது.

இஷான் கிஷன் 30 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களையும் ஹார்திக் பாண்ட்யா 14 பந்துகளில் 5 சிக்ஸர்களைப் பறக்க விட்டு 37 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டில்லியின் பந்து வீச்சில் அஸ்வின் 3 விக்கெட்களையும், நோர்ட்ஜே, ஸ்ரொய்னிஸ் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

201 என்ற கடின இலக்கைத் துரத்த ஆரம்பித்தது டில்லி. ஆனால், மும்பையின் பந்து வீச்சாளர்களான போல்ட், பும்ரா ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தார்கள்.

முதல் ஓவரை வீசிய போல்ட், பிரித்வி ஷாவை எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து வந்த ரஹானேயும் எல்.பி.டபிள்யூ. முறையில் ஓட்டம் எதையும் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனால், முதல் ஓவரில் இரு விக்கெட்களை இழந்து ஓட்டம் எதையும் எடுக்காமல் தடுமாறியது டில்லி.

இரண்டாவது ஓவரை வீசிய பும்ராவின் இரண்டாவது பந்தில் தொடக்க வீரர் தவான் டக் - அவுட் ஆனார். அந்த ஓவரிலும் டில்லி அணி ஓட்டம் எதனையும் பெறவில்லை.

ஸ்ரேயாஸ் ஐயருடன் இணைந்த ஸ்ரொய்னிஸ் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், ஸ்ரேயாஸ் ஐயர் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த பந்த் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பட்டேல் மட்டுமே ஸ்ரொய்னிஸூடன் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெதுவாக உயர்த்தியது.

ஸ்ரொய்னிஸ் அரைச்சதம் கடக்க, பட்டேல் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 65 ஓட்டங்களைக் குவித்து பும்ராவின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே டில்லி அணி பெற்றது. மும்பையின் பந்து வீச்சில் பும்ரா 4 விக்கெட்களையும், போல்ட் 2 விக்கெட்களையும் குர்னல் பாண்ட்யா, பொலார்ட் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பும்ரா தெரிவானார்.

இன்றைய தினம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் ஹைதராபாத் அணிகள் எலிமினிட்டர் போட்டியில் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணியுடன் டில்லி அணி ஞாயிற்றுக்கிழமை நடக்கும் இரண்டாவது குவாலிபையர் போட்டியில் மோதும்.

## இன்றைய ஆட்டம்

DREAM11 IPL

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் **எதிர்** ஹைதராபாத் சன் ரைசர்ஸ்

**மைதானம் : அபுதாபி**

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

## சத்திய சாயி சர்வதேச நிறுவனம் வட பிராந்தியம்

**கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க நாம் எல்லோரும் ஒன்றாக குறிக்கப்பட்ட நேரத்தில்**

## பிரார்த்திப்போம்

ஆண்டவனின் கிருபை ஒன்றுதான் எம்மைப் பாதுகாக்கும். எல்லோரும் ஒன்றாக ஒற்றுமையாகப் பிரார்த்தித்தால் இதன் சக்தி அதிகளவில் பெருகும். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (08.11.2020) அன்று மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை ஒன்றாகப் பிரார்த்திப்போம். வழிபாட்டு நிலையங்களில் பி.ப. 5.00 மணிக்கும் 6.00 மணிக்கும் மணியோசை ஒலிக்கட்டும். மக்கள் எழட்டும். ஒரு மணித்தியாலம் தேவார திருப்பதிகங்கள் மற்றும் மந்திரங்கள் மூலம் இறைவனைப் பிரார்த்திப்போம். எல்லோரையும் பாதுகாக்கும்படி இறைவனை வேண்டுவோம்.

எல்லோரையும் ஆண்டவன் ஆசிர்வதிக்கட்டும்...

**சத்திய சாயி சர்வதேச நிறுவனம்,**
**வட பிராந்தியம், ஸ்ரீ லங்கா.**

## அருந்ததி

இணைய திருமண சேவை

**0777 164 524** www.arunthathee.com

**மணமகன் விபரம்**

**16153 | வே | 1982**
மாதகல் | இந்து | செவ் : 4
Manager | Australia
விசாகம் (துலாம்) | 173 செ.மீ

**16030| வே | 1986**
இந்து | இலங்கை
Production Manager
சித்திரை (கன்னி); 172 செ.மீ

**16120 | வே | 1988**
கரவெட்டி | இந்து |செவ் : 7
Software Engineer
அத்தம் (கன்னி)| 185 செ.மீ

**15595 | கோ| 1990**
இளவாலை| இந்து
SW Engineer | சிங்கப்பூர்
அத்தம் (கன்னி) | 180செ.மீ

**15547 | வே | 1992**
திருநெல்வேலி | இந்து
Doctor | SL | 174 செ.மீ
பூரம் (சிம்மம்)

**மணமகள் விபரம்**

**16165 | கோ | 1989**
இந்து | SL | செவ் : 2
Management Assistant
அத்தம் (கன்னி)

**15700 | வே | 1991**
பருத்தித்துறை| இந்து
Audit | செவ் : 4
சதயம் (கும்பம்)

**15673 | வே | 1994**
புத்தூர்|இந்து |SL |158செ.மீ
Pub. Relation Manager
அத்தம் (கன்னி)|சூ-செவ் : 7

**15784 | ந | 1997**
மானிப்பாய் | இந்து
Technical officer | SL
மகம் (சிம்மம்)

**15940 | ப | 1998**
அரியாலை | இந்து
A/L | SL | சூ-செவ் : 12
பூரட்டாதி (கும்பம்)|168 செ.மீ

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : பத்துக்கு பத்து ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்




5.00 மணி : சினிமா சினிமா
5.30 மணி : சோட் ப்லிம்
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
பரத நாட்டியக்கலைஞர் தாட்ஷாயினியுடன்....




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்
பெண் தலைமைத்துவம் அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN VISION HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உடைடம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்

**இரவு**
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.11.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.